தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 320/ந/2023
நாள் 17.11.2023

திரு. டி.பி. தங்கராஜ்,
மதிகோண்பாளையம்,
தருமபுரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
தருமபுரி நகராட்சி,
தருமபுரி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தருமபுரி மாவட்டம், மதிகோண்பாளையம், பீமன் முதல் தெரு, எண். 30–31 என்ற முகவரியில் வசிக்கும் திரு. டி.பி. தங்கராஜ் என்பவரின் 17.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.10.2023 அன்று பெறப்பட்டு 320/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தருமபுரி மாவட்டம், மதிகோண்பாளையம், பீமன் முதல் தெரு, எண். 30–31 என்ற முகவரியில் வசிக்கும் திரு. டி.பி. தங்கராஜ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"தருமபுரி நகராட்சியில் இளநிலைப் பொறியாளர் பொறுப்பில் இருந்த தவமணி, ஜெயவர்மன் ஆகியோர் உள்நோக்கம் கொண்டு 15வது TIED-UN-TIED GRANT செய்துள்ள ஒன்பது பாத்ரூம் பணிகளுக்கு பில் குறைத்து எழுதிவிட்டு கமிசன் 3% கொடுத்த பிறகுதான் மீண்டும் அளவுகள் எடுக்க வருவோம், எழுதிக்கொடுப்போம் நீ எங்கே வேண்டுமானாலும் போய் சொல்லிக் கொள்ளுங்கள் அவர்களை எல்லாம் நாங்க பார்த்துக்கொள்கிறோம். நீங்கள் எந்த அதிகாரியிடம் புகார் செய்கிறீர்களோ அவர்களுக்கும் சேர்த்துதான் நாங்கள் கமிசன் கொடுக்கின்றோம் அவர்களால் எங்களை ஒன்றும் செய்யவே முடியாது என்று திமிர் கொண்டு அரசுக்கு எதிராக சொல்கின்றனர். இவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி 03.04.2023–ல் பதிவு தபால் மூலம் தருமபுரி நகராட்சி ஆணையாளருக்கு மனு வழங்கியிருக்கின்றேன்.

மேற்கண்டுள்ள ஒப்பந்தப்பணிகள் ந.க.எண்.21191 நாள் 13.11.2021 டெண்டர் விடப்பட்டு மே மாதம் 2022 –ல் தான் வேலை உத்தரவு வழங்குவதற்காக பொறியியல் பிரிவு இளநிலை உதவியாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் அழைத்தனர்.

வேலை உத்தரவுகள் வழங்கிய உடன், நான் அனைத்து ஒன்பது பாத்ரூம் பணிகளும் ஜுன், ஜுலை மாதங்களில் முழுமையாக முடிக்கப்பட்டு அனைத்து பாத்ரூம்களையும் நகராட்சி வசம் ஒப்படைத்துவிட்டேன்.

ஒன்பது பணிகளும் முடிக்கப்பட்டு அனைத்து பணிகளுக்கும் இளநிலைப் பொறியாளர் பொறுப்பில் இருந்த தவமணி, ஜெயவர்மன் ஆகியோர் ஒன்பது பாத்ரூம் பணிகளையும் ஜுலை மாதம் என் முன்னால் அளவுகள் (measurement) எடுத்தனர். அதன் பிறகு, நான் பில் பட்டியல் வழங்கிடுமாறு கேட்டும் பில் பட்டியல் வழங்காமல் பொறியியல் பிரிவில் இளநிலைப் பொறியாளர் பொறுப்பில் இருந்த தவமணி மற்றும் ஜெயவர்மன் ஆகியோர் காலதாமதம் செய்து வந்தனர்.

ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் முடித்த பணிகளுக்கு டிசம்பர் மாதம் பில் பட்டியல் எழுதிக்கொடுத்துள்ளனர். ஒன்பது பாத்ரூம் பணிக்கும் காசோலை (09.02.2023 1910000–09) நகராட்சியில் வழங்கினார்கள். அப்போதுதான் எனக்கு விவரம் தெரியவந்தது.

என்னால் செய்து முடிக்கப்பட்டுள்ள பணிகள், என் முன்னால் எடுக்கப்பட்டுள்ள அளவுகளில் 30 சதவீதம் விட்டு விட்டு, அளவு புத்தகத்தில் எழுதியுள்ளனர். பொறியியல் பிரிவில் இளநிலைப் பொறியாளர் பொறுப்பில் இருந்த தவமணி மற்றும் ஜெயவர்மன் ஆகியோரிடம் இன்றைய நாள் வரை நேரிடையாகவும், போன் மூலமாகவும் அளவு புத்தகத்தில் நான் கையொப்பம் போட்டுள்ள அளவுகளின் நகல் கொடுங்கள் என்றாலும், பொறியியல் பிரிவில் இளநிலைப் பொறியாளர் பொறுப்பில் இருந்த தவமணி மற்றும் ஜெயவர்மன் ஆகியோர் கொடுக்க மறுத்து வருகின்றனர். சம்பந்தப்பட்டுள்ள நகராட்சி இளநிலைப் பொறியாளர்கள் பொறுப்பு தவமணி மற்றும் ஜெயவர்மன் ஆகியோர் என்னால் செய்து முடிக்கப்பட்டுள்ள ஒன்பது பாத்ரூம் பணிகளை அளவு புத்தகத்தில் எழுதிவிட்டு என்னிடத்தில் கையொப்பம் பெற்றனர். என்னிடம் கையொப்பம் பெறப்பட்டுள்ள அளவு புத்தகத்தை மாற்றிவிட்டு புதியதாக அவர்களாகவே புதிய அளவு புத்தகம் எழுதிக் கொடுத்து இருக்கின்றனர். இளநிலைப் பொறியாளர் பொறுப்பில் இருந்த தவமணி மற்றும் ஜெயவர்மன் ஆகியோர் என்னால் கையொப்பம் போடப்பட்டுள்ள பில் பட்டியல் தொகைகள் வழங்கும் அளவு புத்தகத்தை மறைத்துவிட்டு அவர்களாகவே தனியாக அளவு புத்தகங்கள் எழுதிக்கொண்டு பொறியியல் பிரிவில் இருந்து ஆணையாளருக்கு சமர்ப்பித்துள்ளனர். நான் கையொப்பம் போட்டுள்ள அளவு புத்தகம் எங்கே என்று கேட்டால் நகராட்சி இளநிலைப் பொறியாளர்கள் பொறுப்பு தவமணி மற்றும் ஜெயவர்மன் ஆகியோர் எந்த பதிலும் சொல்ல மறுக்கின்றனர். பில் பட்டியல் எழுதக்கூடாது என்று பொறியாளர் தடுப்பதாக சம்மந்தப்பட்ட இளநிலைப் பொறியாளர்கள் பொறுப்பில் இருந்த தவமணி மற்றும் ஜெயவர்மன் ஆகியோர் தெரிவிக்கின்றனர்.

தருமபுரி நகராட்சியில் இளநிலைப் பொறியாளர் பொறுப்பில் இருந்த தவமணி மற்றும் ஜெயவர்மன் ஆகியோர் முழுமையான பட்டியல் பில் எழுதாமல் என்னை அலைக்கழித்து என்னை மன உளைச்சலுக்கு ஆளாக்கியும் 3 சதவீதத் தொகைகள் கமிசன் கேட்டும் வற்புறுத்திக்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் மீது நடவடிக்கை எடுத்தும், நான் செய்து கொடுத்துள்ள ஒன்பது பாத்ரூம் பணிகளுக்கும் முழுமையான பில் பட்டியல் தொகைகள் வழங்கிடவேண்டியும் ஆவன செய்து கருணைக் கூர்ந்து உத்தரவிடுமாறு தாங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

<u>வேலையின் விவரம்:</u>

வார்டு எண்.01 – முத்து ஆச்சாரி தெருவில் உள்ள சமுதாய கழிப்பிட மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மதிப்பு: ரூ. 5.40 இலட்சம்

வார்டு எண்.02 – ரத்தினம் தெருவில் உள்ள சமுதாய கழிப்பிட மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மதிப்பு: ரூ. 3.90 இலட்சம்

வார்டு எண்.03 – காமாட்சியம்மன் தெருவில் உள்ள சமுதாய கழிப்பிட மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மதிப்பு: ரூ. 3.70 இலட்சம்

வார்டு எண்.10 – அரிச்சந்திரன் மயானத்தில் உள்ள சமுதாய கழிப்பிட மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மதிப்பு: ரூ. 4.10 இலட்சம்

வார்டு எண்.32 – தண்டுப்பாதை பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிட மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மதிப்பு: ரூ. 5.30 இலட்சம்

வார்டு எண்.30 – பச்சையம்மன் கோவில் பகுதியில் உள்ள எரிவாயு தகனமேடை பகுதி மயான சமுதாய கழிப்பிட மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மதிப்பு: ரூ. 3.40 இலட்சம்

வார்டு எண்.20 – அக்ரகார தெருவில் உள்ள சமுதாய கழிப்பிட மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மதிப்பு: ரூ. 4.50 இலட்சம்

வார்டு எண்.26 – மிட்டாரெட்டிஅள்ளி பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிட மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மதிப்பு: ரூ. 3.20 இலட்சம்

வார்டு எண்.26 – கொள்ளஹள்ளி ரோட்டில் உள்ள சமுதாய கழிப்பிட மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மதிப்பு: ரூ. 3.50 இலட்சம்

மேற்கண்ட ஒன்பது பாத்ரூம் பணிகளும் என்னால் ஜூலை மாதம் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ள ஒப்பந்த பணிகள் செய்து முடிக்கப்பட்டு அளவுகளை குறைத்து எழுதிக்கொடுத்து இருப்பதை நான் அனைத்து பணிகளுக்கும் காசோலைகள் பெறும்போது தெரியவந்தது. எனவே தாங்கள் நேரிடையாக ஆய்வு செய்து முழுமையான பட்டியல் தொகை வழங்கிட வேண்டுகின்றேன்.

சம்பந்தப்பட்டுள்ள பொறியியல் பிரிவில் இளநிலைப் பொறியாளர் பொறுப்பில் இருந்த தவமணி மற்றும் ஜெயவர்மன் ஆகியோருக்கு அறிவுறுத்தியும் இவர்கள் மீது உடனடி உரிய நடவடிக்கை துறைரீதியாக மேற்கொள்ளுமாறும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.10.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் தருமபுரி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

தருமபுரி நகராட்சி ஆணையாளர் தனது 30.10.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:–

"தருமபுரி நகராட்சியில் 15வது CFC Untied Grant 2020–2021 ஆம் நிதித் திட்டத்தின் கீழ் 9 எண்ணிக்கை கழிப்பிட கட்டடங்கள் பழுது பார்க்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 31.12.2021–ல் கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் அனைத்து பணிகளுக்கும் திரு. டிபி. தங்கராஜ் என்ற ஒப்பந்ததாரரால் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்டதை ஏற்று 05.01.2022 ஆம் தேதியில் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள 9 பாத்ரூம் பராமரிப்பு பணி செய்யப்பட்டதற்கு உரிய அளவுகளை திரு.தவமணி, இளநிலை பொறியாளர்(பொ), திரு.ஜெயவர்மன், இளநிலைப் பொறியாளர்(பொ) கணக்கீடு செய்து, அளவு புத்தகத்தில் பதியப்பட்டதை திரு.ஜெயசீலன், பொறியாளரால் மேலாய்வு செய்யப்பட்டபின் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட கோப்பு மற்றும் அளவுப் புத்தகங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் இதில் எவ்வித தவறும் நடைபெறவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் மதிப்பீட்டுத் தொகை ரூ 37.00 இலட்சத்தில், பணி செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி ரூ 21.15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஏதுமில்லை என்பதும் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் தருமபுரி நகராட்சி ஆணையரும் 31.10.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.10.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. டிபி. தங்கராஜ் 31.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"தருமபுரி மாவட்டம், தருமபுரி நகராட்சியில் 15வது மத்திய நிதிக் குழு திட்டத்தின் கீழ் நடைபெற்ற கழிப்பிட கட்டடங்கள் பழுது பார்க்கும் பணிக்கு என்னால் முறைப்படி ஒப்பந்தப்புள்ளி அனுப்பப்பட்டு, நகராட்சியிலிருந்து வேலை உத்தரவைப் பெற்று 9 எண்ணிக்கையிலான பழுதுபார்க்கும் பணிகளை பணி உத்தரவின்படி குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடித்து விட்டேன். ஆனால், மேற்கண்ட பணிக்கு எனக்கு சேர வேண்டிய பட்டியல் தொகையை முழுமையாக அளிக்காமல், செய்து முடித்த அளவுகளை நகராட்சி அளவுப் புத்தகத்தில் ( M Book) பதிவு செய்யாமல் குறைத்து எழுதி வழங்கியுள்ளனர். இது குறித்து ஆணையரிடம் புகார் மனு அளித்தும் அவர்கள் மெத்தனமாக இருந்து வருகின்றனர். மேலும் என்னால் செய்து முடிக்கப்பட்ட பணிக்கு நகராட்சி அளவுப் புத்தகத்திலும் ( M Book) என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது. பின்னர் மேற்கண்ட அளவுப் புத்தகத்தை அவர்களே புதிதாக தயாரித்துள்ளனர். இது என்னை கட்டுப்படுத்தாது.

எனவே இது குறித்து விசாரித்திடவும், எனக்கு சேர வேண்டிய நிலுவைத் தொகையை நகராட்சி அளித்திடவும், தவறு செய்த அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான தருமபுரி நகராட்சி ஆணையர் திரு.சோ.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை மற்றும் நகராட்சிப் பொறியாளர் திருமதி.சி.புவனேஸ்வரி ஆகியோர் 31.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

"மத்திய நிதிக் குழு திட்டத்தின் கீழ் ( 2020–21) தருமபுரி நகராட்சியில் கழிப்பிடப் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு, மனுதாரருக்கு 9 மராமத்துப் பணிகள் மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டது.

மேற்கண்ட ஒப்பந்ததாரரான மனுதாரரால் செய்து முடிக்கப்பட்ட பணிகளை நகராட்சி அலுவலர்கள் அளவீடு செய்து, மேற்கண்ட அளவீட்டின்படி மனுதாரருக்கு சேரவேண்டிய தொகையான ரூபாய் 21.15 இலட்சம் அவருக்கு வழங்கப்பட்டுவிட்டது என்பதையும், அவருக்கு அளிக்க வேண்டிய நிலுவைத் தொகை ஏதுமில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், அவருக்கு அளிக்கப்பட்ட பணி குறித்த விவரங்கள் நகராட்சியின் அளவீட்டுப் புத்தகத்தில் (M Book) பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் ஆனால், அளவீட்டுப் புத்தகத்தில் ஒப்பந்ததாரரான மனுதாரரின் கையொப்பம் பெறப்படவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இம்முறைமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 30.10.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், தருமபுரி நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் நகராட்சிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

தருமபுரி மாவட்டம், மதிகோண்பாளையம் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு.டி.பி.தங்கராஜ் என்பவர் தனது 17.10.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில், தருமபுரி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு திட்டத்தின்கீழ் 9 எண்ணிக்கையிலான சமுதாய கழிவறைகளை மராமத்து செய்த பணிகளுக்கு நகராட்சியினரால் புதிய அளவுப் புத்தகம் தயாரிக்கப்பட்டு, முறைகேடாக குறைவான பணியை பதிவு செய்து தனக்கு சேரவேண்டிய பட்டியல் தொகை ரூ.37 இலட்சம் கிடைக்கப்பெறவில்லை என புகார் தெரிவித்துள்ளார்.

தருமபுரி நகராட்சியில் 2020–21 ஆம் ஆண்டு 15வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ், கீழே குறிப்பிட்டுள்ள 9 எண்ணிக்கையிலான கழிவறைகளின் மராமத்துப் பணிகளை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மனுதாரர் திரு.டி.பி.தங்கராஜ் என்பவர் பணி மேற்கொள்ள 05.01.2022 தேதியிட்ட பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

| வ.எண். | பணிகள் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 01. | வார்டு எண்.1, முத்து ஆச்சாரி தெருவில் உள்ள சமுதாய கழிவறை மராமத்துப் பணி | 5.40 |
| 02. | வார்டு எண்.2, ரத்தினம் தெருவிலுள்ள சமுதாய கழிவறை மராமத்துப் பணி | 3.90 |
| 03. | வார்டு எண்.3, காமாட்சியம்மன் தெருவிலுள்ள சமுதாய கழிவறை மராமத்துப் பணி. | 3.70 |

| | | |
|---|---|---|
| 04. | வார்டு எண்.10, அரிச்சந்திரன் மயான பகுதியில் உள்ள சமுதாய கழிவறை மராமத்துப் பணி | 4.10 |
| 05. | வார்டு எண்.20, அக்ரகார தெருவில் உள்ள சமுதாய கழிவறை மராமத்துப் பணி | 4.50 |
| 06. | வார்டு எண்.26, மிட்டாரெட்டிஹள்ளி பகுதியிலுள்ள சமுதாய கழிவறை மராமத்துப் பணி | 3.20 |
| 07. | வார்டு எண்.26, கொள்ளஹள்ளி ரோடு பகுதியில் உள்ள சமுதாய கழிவறை மராமத்துப் பணி | 3.50 |
| 08. | வார்டு எண்.30, பச்சையம்மன் கோவில் எரிவாயு தகனமேடை பகுதியில் உள்ள சமுதாய கழிவறை மராமத்து பணி | 3.40 |
| 09. | வார்டு எண்.32, தண்டுபாதை தெருவில் உள்ள சமுதாய கழிவறை மராமத்துப்பணி | 5.30 |
| | மொத்தம் | 37.00 |

மேற்காணும் நகராட்சி ஆணையரின் பணி ஆணைகளின்படி, குறிப்பிட்ட காலத்தில் அனைத்து 9 எண்ணிக்கையிலான பணிகள் மொத்தம் ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, பணிமுடித்தவுடன் நகராட்சியினர் பதிவுப் புத்தகத்தில் (M Book) பதிவு செய்து ஒப்பந்ததாரரான மனுதாரர் திரு.டி.பி.தங்கராஜ் என்பவர் கையொப்பமிட்டுள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும், நகராட்சி நிர்வாகத்தினர் கோரிய 3% கமிஷன் தொகை அளிக்காததால், நகராட்சியினர் புதிதாக ஒரு அளவுப் புத்தகத்தை (M Book) உருவாக்கி அதில், தான் குறைவான பணி மேற்கொண்டதாகவும், அதற்கான பட்டியல் தொகை ரூ.21.15 இலட்சம் வழங்கப்படும் எனவும் தெரிவித்ததைத் தொடர்ந்து, மனுதாரர் நகராட்சியினரால் முறைகேடாக உருவாக்கப்பட்ட புதிய அளவுப் புத்தகத்தில், தான் கையொப்பமிடவில்லை எனவும் தெரிவித்துள்ளார். அளவுப்புத்தகத்தில் மனுதாரர் கையொப்பமிடவில்லை என்பதை நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலத்திலும் உறுதி செய்துள்ளனர்.

உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படும் அளவு புத்தகம் (Measurement Book) குறித்து நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறையால் அரசாணை (நிலை) எண்.35 நாள் 10.03.2000–ல் வெளியிடப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட பொறியியல் கையேட்டில், அளவு புத்தக (M Book) பராமரிப்புக் குறித்து கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:–

Chapter – IV

## Measurement of Works and Measurement Books

(i) All work done shall be measured then and there and payment shall be made at least once in a month.

(ii) The entries in the Measurement Book shall be made in ink only.

(iii) The situation or location of the work must be clearly described.

(iv) The number of the voucher as well as the date of entry will be endorsed upon the entries in the Measurement Book and the endorsement intialled by the Commissioner or the Manager.

(v) The Municipal Engineer will be responsible for seeing the Measurement Books are carefully kept and measurement properly recorded.

(vi) All measurements of works done will be recorded in the measurement Book which shall be looked upon as a most important record, since it is the basis of all account of quantities.

(vii) Signature of the contractors shall be obtained for the acceptance of the measurements and check measurements.

ஒப்பந்ததாரர்களால் ஒப்பந்தப்புள்ளி மூலம் செய்து முடிக்கப்பட்ட பணிகள் அளவு புத்தகத்தில் பதியப்பட்டு, அதன் அடிப்படையில் பட்டியல் தொகை வழங்கப்படும் நிலையில் இத்தகைய முக்கியமான ஆவணமான அளவு புத்தகத்தில் மனுதாரர் திரு.டி.பி.தங்கராஜ் என்பவர் 9 எண்ணிக்கையிலான பணிகளை ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடித்து, மனுதாரர் கையொப்பமிட்ட அளவு புத்தகத்தினை மறைத்து, தருமபுரி நகராட்சி நிர்வாகத்தினரால் புதிதாக அளவு புத்தகம் தயாரிக்கப்பட்டு, குறைந்தளவு பணி மேற்கொண்டதாக அளவு புத்தகத்தில் பதிந்து, ரூ.21.15/– இலட்சம் மட்டுமே அளவு புத்தகத்தில் ஒப்பந்ததாரரின் கையொப்பம் இல்லாமல் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது என மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இந்நிலையில் மனுதாரர் திரு.டி.பி.தங்கராஜ் என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புகாரினை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை மூலமாக விசாரணை மேற்கொண்டால் மட்டுமே புகார் குறித்த உண்மைத் தன்மையினை அறிய இயலும் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும் மனுதாரர் திரு.டி.பி.தங்கராஜ் போன்றே பிற ஒப்பந்ததாரர்களுக்கும் அளவு புத்தகத்தில் குறைவான பணியை பதிவு செய்யப்பட்டிருக்கலாம் என்கிற ஐயப்பாடு எழுகிறது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் விசாரணை ஒன்றினை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, புலனாய்வு முகவாண்மை எதன் பணியினையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 6 (4) (அ)–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் திரு.டி.பி.தங்கராஜ் என்பவரின் புகாரினையும் மற்றும் இதுபோன்றே அக்காலகட்டத்தில் தருமபுரி நகராட்சியால் பிற ஒப்பந்ததாரர்களுக்கும் அளவு புத்தகத்தில் பதியப்பட்டது குறித்தும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மூலம் விசாரணைக்கு உட்படுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு ௬6 (4) (ஏ)–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) இயக்குநர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை,
எண்.293, எம்.கே.என்.சாலை, ஆலந்தூர்,
சென்னை 600 016.

2) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

3) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

4) ஆணையாளர், தருமபுரி நகராட்சி,
தருமபுரி மாவட்டம்.

5) திரு. டி.பி. தங்கராஜ்,
30–31, பீமன் முதல் தெரு,
மதிகோண்பாளையம், தருமபுரி மாவட்டம்.

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

20/11/23